**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.124 /2019**
**Connected with**
**அசல் வழக்கு எண்.103 /2019**

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04–ம் நாள் திங்கட்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 04.09.2023 | தந்தை/கணவர் பெயர்: | முருகேசன் |
| பெயர்: | திரிபுரசுந்தரி<br>(PW1 chief continuation) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | தொழுதூர் | சமயம்: | |
| சாதி: | | வயது : | 61 /2023 |
| தொழில்: | | | |

**முதல் விசாரணை தொடர்ச்சி :04.09.2023**

இடைமனு எண்.02/23-ல், நாள் 04.09.2023 பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதன்மை விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

லெட்சுமிஅம்மாள் பெயரில் ஏற்பட்ட 30.06.1996 ஆம் தேதிய குத்தகை உரிமை பதிவு அலுவலரின் உத்தரவின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.**3 **ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எனது பெயர் மற்றும் எனது கணவர் பெயரில் தாவா சொத்தினை பொருத்து கோயிலாருக்கு செலுத்திய குத்தகை ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.**4 **வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது. (எண்ணிக்கை** - 5). தாவா சொத்தினை பொருத்து நான் செலுத்திய கிஸ்தி ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.**5 **வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது. (எண்ணிக்கை** -4) தாவா சொத்தை

பொருத்து குத்தகை உரிமை பதிவு அலுவலரிடமிருந்து எனக்கு வந்த அழைப்பாணை கடிதத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கு எண்.103/2019–ஐ தள்ளுபடி செய்தும் அசல் வழக்கு எண்.124/2019–க்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்ன பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இருந்து வருவதால் பிரதிவாதி பிரச்சனை செய்ததால் உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்துள்ளேன். எங்களுக்கு தாவா சொத்து கிராமத்தில் வேறு நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். எங்கள் கிராமத்தில் நிலங்கள் அனைத்தும் வைத்தியநாதசுவாமி தேவதானஸ்த்திற்கு பாத்தியப்பட்டது என்றால் கோயில் நிலமும் பட்டா நிலமும் உள்ளது. பட்டா நிலமும் கோயிலுக்கு சொந்தமானது என்றால் சரிதான். தாவா சொத்தை பொருத்து இன்றையதேதி வரையில் ஆர்.டி.ஆர் லெட்சுமி (3–ம் பிரதிவாதி) பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் கேவியட் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து தவிர வேறு வைத்தியநாதசுவாமி தேவதானஸ்த்திற்கு சொந்தமான நிலத்தையும் நான் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 வரிசையானது நான் விவசாயம் செய்து வரும் வேறு நிலத்திற்கானது என்றும் தாவா சொத்திற்கானது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 வரிசையானது நான் விவசாயம் செய்து வரும் வேறு நிலத்திற்கானது என்றும் தாவா சொத்திற்கானது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 வரிசையானது சொத்தின் உரிமையாளர் தான் செலுத்தவேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6–ல் கண்டுள்ளவாறு

குத்தகை உரிமை பதிவு அலுவலரிடம் அன்றைய தேதியில் எவ்வித அசல் ஆவணமும் ஆஜர்படுத்தவில்லை என்றால் சரியல்ல, பிரச்சனை இருப்பதால் அதை முடித்து கொண்டு வருமாறு சொன்னதால் ஆஜர் செய்யவில்லை. என்ன என்ன அசல் ஆவணங்கள் குத்தகை உரிமை பதிவு அலுவலரிடம் ஆஜர்படுத்தினேன் என்றால் வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4 வரிசை மற்றும் வா.சா.ஆ.5 வரிசை ஆகியவைகளை ஆஜர் செய்தேன். நான் மேற்சொன்னவாறு எவ்வித ஆவணமும் குத்தகை பதிவு அலுவலரிடம் ஆஜர்படுத்தவில்லை என்றும் வழக்கிற்காக ஆஜர்படுத்தியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குரையில் சொன்னவாறு 2005 ஆம் வருடம் பிரதிவாதிகள் தாவா சொத்தை சுவாதீனம் ஒப்படைத்ததாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். நான் வழக்குரையில் சொல்லியுள்ளவாறு தாவா சொத்தில் குறுவை நெல் சாகுபடி செய்து வரவில்லை என்றும் இதுநாள்வரையில் வழக்கு சொத்து பிரதிவாதிகள் வசம் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நான் வழக்குரையில் சொல்லியுள்ளவாறு 2–ம் பிரதிவாதியின் திருமண செலவிற்காக ரூ.1,00,000/– கொடுத்ததாக சொல்லியுள்ளது பொய் என்றும் அது சம்பந்தமாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து இதுநாள்வரையில் பிரதிவாதிகளின் வசம் இருந்து வருவதால் நான் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.